**தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தில், 1043 பயனாளிகளுக்கு ரூ.3.29 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, சத்யபாமா திருமண மண்டபத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.11.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் கலந்து கொண்டு, வருவாய்த்துறையின் மூலம் 359 பயனாளிகளுக்கு ரூ.16,43,1000/- மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாவிற்கான உத்தரவு மற்றும் 631 பயனாளிகளுக்கு ரூ.75,72,000/- மதிப்பிலான முதியோர் ஒய்வூதியம் மற்றும் இதர ஒய்வூதியத்திற்கான ஆணைகளையும், கால்நடை பராமாப்புத்துறையின் மூலம் 32 பயனாளிகளுக்கு ரூ.36,31,150/- மதிப்பிலான விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை பசு மாடுகள், வேளாண்மைத்துறையின் மூலம் 2 விவசாயிகளுக்கு ரூ.3,500/- மதிப்பிலான விவசாய இடுபொருட்களையும், மகளிர் திட்டத்தின் மூலம் உழைக்கும் 19 மகளிர்களுக்கு ரூ.53,00,000/- மதிப்பிலான அம்மா இருசக்கர வாகனங்கள் என மொத்தம் 1043 பயனாளிகளுக்கு ரூ.3,29,37,650/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், விளாத்தின்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.போ.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தினை அறிவித்து இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காண வேண்டும் என உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில், முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது பரிசீலனை செய்து இன்று கோவில்பட்டி மற்றும் கயத்தார் வட்டத்தில் உள்ள 1043 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 29 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திய இந்த திட்டத்தினை மத்திய அமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் அவர்கள் பாராட்டினார்கள். மேலும், இந்தியா முழுவதும் இத்திட்டத்தினை மக்கள் பாராட்டி பேசும் விதமாக அமைந்துள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வந்தார்கள். குறிப்பாக, சமூக நலத்துறையின் மூலம் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.25 ஆயிரமும், பட்டப்படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50 ஆயிரமும் மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், பள்ளி கல்வித்துறையின் மூலம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாணவ செல்வங்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், வீட்டின் அருகில் இருந்து பள்ளிக்கு செல்ல ஏதுவாக விலையில்லா மதிவண்டி வழங்கும் திட்டம், முதன்முறையக இந்தியாவிலேயே ஒய்வூதியம் அறிவித்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.6 ஆயிரத்திலிருந்து ரூ.12 ஆயிரமாக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். இதனை தொடர்ந்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18 ஆயிரமாக உயர்த்தி வழங்கி வருகிறார்கள். இது போன்ற பல்வேறு திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வரும் ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு தான். நமது மாவட்டத்தில், முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டம் ஆகஸ்ட் 1 முதல் 31 தேதி வரை நடைபெற்றது. இதில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டு இன்று அதற்கான நலத்திட்ட

உதவிகள் வழங்கப்பட்டது. கோவில்பட்டி, கயத்தாறு பகுதியுடன் ஒரே தாலுகாவாக செயல்பட்டு இருந்தது.

இதனால் பொது மக்கள் அளிக்கும் மனுக்கள் மிது தீர்வு காண்பதற்கு நீண்ட நாட்கள் ஏற்பட்டது. மேலும், பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்ததையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு நான் எடுத்துச் சென்றேன். இந்த கோரிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்று கயத்தாரை புதிய வட்டம் அமைக்கப்படும் என சிறப்பான அறிவிப்பை அறிவித்தார்கள். பின்னர் கயத்தார் வட்டமாக பிரிக்கப்பட்டு பொது மக்களின் கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கு ஏற்கனவே இருந்த வருமான உச்சவரம்பு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தி அதற்கான ஆணையினை வெளியிட்டார்கள். எனவே, தகுதி வாய்ந்த அனைத்து பயனாளிகளுக்கும் ஒய்வூதியம் கிடைக்கும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடிமராமத்து திட்டத்தின் கீழ், விவசாயிகளின் பங்களிப்புடன் பல்வேறு இடங்களில் உள்ள குளங்கள், கண்மாய்கள், ஊரணிகள், தூர்வாரப்பட்டு மழை நீர் சேமிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பொது மக்களிடையே குறிப்பாக விவாசய பெருமக்களிடம் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது. இந்த திட்டம் செயல்படுத்துவதால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் செய்கிறது. மேலும், எதிர்காலத்தில் குடிநீர் பற்றாக் குறையினை தவிர்க்கவும் இந்த திட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டம் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. முன்பாக அரசு அலுவலகங்களை நாடி மக்கள் வருகை தந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசைத்தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி மக்கள் இருப்பிடத்திற்கே சென்று பல்வேறு முகாம்கள் மூலம் சிரமமின்றி அரசின் நலத்திட்ட உதவிகளை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கிராமப்புறத்தில் உள்ள மக்களுக்கு மருத்துவமுகாம்கள் நடத்தப்பட்டு அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இது போன்ற முகாம்களில் பொது மக்கள் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

அதனை தொடர்ந்து, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள், தேசிய பத்திரிக்கையாளர்கள் தினத்தை முன்னிட்டு பத்திரிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மோகன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.கணேஷ்பாண்டியன், இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.சத்ய நாரயணன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு.சங்கரநாரயணன், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியன், நகராட்சி ஆணையர் திரு.ராஜாராம், வட்டாட்சியர்கள் திரு.மணிகண்டன் (கோவில்பட்டி), திரு.பாஸ்கரன் (கயத்தார்), வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கிரி, முக்கிய பிரமுகர்கள் திரு.ராமசந்திரன், திரு.இ.பி.ரமேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடாபு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.